# කාර්ය සාධන වාර්තාව

# செயலாற்றுகை அறிக்கை

# Performance Report

2018.01.01 – 2018.03.31

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ
මැතිවරණ කොමිෂන් සභාව

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
தேர்தல் ஆணைக்குழு

Election Commission of
Democratic Socialist Republic of Sri Lanka

# தேர்தல் ஆணைக்குழுவின் 2018 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை.
# (2018.01.01 – 2018.03.31)

## 01. தேர்தல் ஆணைக்குழு

அதிமேதகு சனாதிபதி அவர்களால் அரசியலமைப்புச் சபையின் பரிந்துரையின் அடிப்படையில் தேர்தல் ஆணைக்குழுவிற்கு நியமனம் செய்யப்பட்ட தவிசாளர் உள்ளிட்ட அங்கத்தவர்கள் 2015.11.17 அம் திகதி கடமைகளைக் கையேற்றுக் கொண்டதன் பின்னர் தேர்தல் ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. தேர்தல் ஆணைக்குழுவின் உள்ளடக்கம் வருமாறு

திரு. மஹிந்த தேசப்பிரிய (தவிசாளர்)

சனாதிபதி சட்டத்தரணி என்.ஜே. அபேசேகர (அங்கத்தவர்)

பேராசிரியர் எஸ். இரத்தினஜீவன் எச். ஹூல் (அங்கத்தவர்)

## 02. தேர்தல் ஆணைக்குழுவின் நோக்கு மற்றும் பணிக்கூற்று

**“சர்வசன வாக்குரிமையைப் பாதுகாக்கின்ற ஒரு நாடு” என்பது தேர்தல் ஆணைக்குழுவின் நோக்காகும்.**

அந்த நோக்கை அடைந்து கொள்வதற்காக **“மக்கள் இறைமை, சர்வசன வாக்குரிமை மற்றும் அதனோடு தொடர்புடைய சனநாயகக் கோட்பாடுகள் என்பவற்றைப் பாதுகாத்து, பிரசைகளின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்ற விதத்தில் ஏற்புடையவாறு அனைத்துத் தரப்புக்களையும் அறிவுறுத்துகின்ற சுதந்திரமான நீதியான மற்றும் நம்பத்தகுந்த தேர்தல் செயற்பாடுகளை வினைத்திறனும் விளைதிறனும் கொண்டதாக மேற்கொள்ளல்”** என்றவாறு பணிக்கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

**நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள்**

- தகைமையுடைய அனைத்து பிரசைகளுக்கும் நீதியாகவும் சுதந்திரமாகவும் நடாத்தப்படுகின்ற தேர்தல்களின் போது அச்சமின்றியும் சுதந்திரமாகவும் நம்பிக்கையோடும் தமது வாக்குகளை அளிப்பதற்கு வசதிகளைச் செய்தல்.
- வாக்கைப் பிரயோகித்தல் தமக்குரிய பராதீனப்படுத்த முடியாத ஓர் உரிமையெனவும், தாம் தேர்தல் செயற்பாடுகளினுள் தொழிற்பாட்டு ரீதியாக பங்கேற்கின்றனர் என்பதை புரிந்து கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளையெடுத்தல்.
- தேர்தல் காலப்பகுதியினுள் அனைத்து தேர்தல் வேட்பாளர்களுக்கும் சமமானதும் நியாயமானதுமான சந்தர்ப்பங்கள் கிடைக்கக்கூடியவாறு செயற்படுவதற்கு நடவடிக்கையெடுத்தல்.
- ஒவ்வொரு தேர்தலுக்கும் முன்னர் தகைமையுடைய அனைத்து பிரசைகளும் உள்ளடக்கப்பட்ட நிகழ்நிலைப்படுத்தப்பட்ட தேருநர் இடாப்பொன்றைத் தயாரித்தல்.
- சமூகத்தில் விளிம்பு நிலையில் வாழ்கின்ற அனைத்து பிரசைகளும் விசுவாசமாகவும் போதிய அளவிலும் தேர்தல் செயன்முறைகளில் பங்குக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளையெடுத்தல்.

- தேர்தல் செயன்முறையை திறமையாகவும் வெளிக்காட்டுத் தன்மையுடன் கூடியதாகவும் நிருவாகம் செய்தல்.

- தேர்தல் செயன்முறையோடும், தேர்தல் ஆணைக்குழுவோடும் தொடர்புடைய புள்ளிவிபரங்களையும் மற்றும் உரிய தகவல்களையும் அனைத்து தரப்பினர்களுக்கும் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை காலத்திற்கு பொருத்தமான விதத்திலும் போதுமான அளவிலும் செய்து கொடுத்தல்.

## 03. தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்பொறுப்புக்கள்

தேர்தல் ஆணைக்குழு 2015.11.17 ஆம் திகதி தாபிக்கப்பட்டதன் பின்னர் அதுவரையும் தேர்தல்கள் ஆணையாளர் தலைமையிலான தேர்தல்கள் திணைக்களத்தினால் ஆற்றப்பட்டு வந்த தேர்தல் செயன்முறைகள் தொடர்பான அலுவல்கள் தேர்தல் ஆணைக்குழுவின் கீழ் கொண்டு வரப்பட்டன. அரசியலமைப்பின் 103(2) ஆம் பிரிவுக்கமைய நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல்களை நடாத்துதல் தேர்தல் ஆணைக்குழுவின் பிரதான பணிப்பொறுப்பாகும். அதற்கமைய சனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல், உள்ளூரதிகார சபைத் தேர்தல் மற்றும் மக்கள் தீர்ப்பு போன்ற தேர்தல்களை நீதியாகவும் சுதந்திரமாகவும் நடாத்துதல் அதனோடு தொடர்புடையதாக வருடாந்த தேருநர் இடாப்பு மீளாய்வை மேற்கொள்ளல் இந்த நியதிச் சட்ட அலுவல்களுக்கு மேலதிகமாக பாராளுமன்ற உறுப்பினர் வெற்றிடங்களை நிரப்புதல், மாகாண சபைகளின் வெற்றிடங்களை நிரப்புதல் மற்றும் உள்ளூர் அதிகார சபைகளின் பதவி வெற்றிடங்களை நிரப்புதல், அரசியல் கட்சிகளை அங்கீகரித்தல் மற்றும் பதிவு செய்தல் போன்ற நியதிச் சட்ட பணிகள் தேர்தல் ஆணைக்குழுவுக்குக் கையளிக்கப்பட்டுள்ளது.

## 04. தேர்தல் ஆணைக்குழுக் கூட்டங்கள்

தேர்தல் ஆணைக்குழுவின் கூட்டங்கள் தேவைப்பாட்டிற்கமைய வாரத்திற்கு ஒரு தடவை வீதம் நடாத்தப்படுகின்றது. 2017 ஆம் ஆண்டில் 48 கூட்டங்கள் நடாத்தப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை 15 ஆகும். ஆணைக்குழுவின் கூட்டங்களை நடாத்தும் போது ஏற்படுகின்ற பிரதான பிரச்சினை குறைநிறைவெண் தொடர்பான பிரச்சினையாகும் அதற்குக் காரணம் மொத்த அங்கத்தவர் எண்ணிக்கையும் குறைநிறைவெண்ணாக குறிப்பிடப்பட்டுள்ளமையாகும். இக்குறைநிறைவெண்ணை மாற்றுவதற்குத் தேவையான பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள போதும் அது தொடர்ந்தும் தாமதமடைந்து வருவதைக் காண முடிகிறது. இதன் காரணமாக அங்கத்தவரொருவர் வெளிநாடு சென்றுள்ள போது அல்லது கொழும்புக்கு வெளியில் செல்கின்ற சந்தர்ப்பங்களின் போது SKYPE தொழிநுட்பத்தினூடாக அவரை தொடர்புக் கொள்வதற்கு நடவடிக்கையெடுக்கப்படுகின்றது.

## 05. தேர்தல் ஆணைக்குழுவின் பணியாட் குழுவினர்

தேர்தல் ஆணைக்குழுவின் மொத்தப் பணியாட் குழு, பதவிநிலை அலுவலர்களான தவிசாளர் மற்றும் அங்கத்தவர்கள், செயலாளர், தேர்தல்கள் பணிப்பாளர் நாயகம், இலங்கை நிருவாக சேவையின் (இ.நி.சே) அலுவலர்கள், இலங்கை கணக்காளர் சேவையின் (இ.க.சே) அலுவலர்கள், பணிப்பாளர் (சட்டம்), இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப சேவையின் (இ.த.தொ.தொ.சே) அலுவலர்கள் இலங்கை திட்டமிடல் சேவையின் (இ.தி.சே) அலுவலர்கள் அரச முகாமைத்துவ உதவியாளர் (அ.மு.உ.சே) விஷேட வகுப்பு அலுவலர்கள், மொழிபெயர்ப்பு அலுவலர்கள் மற்றும் பதவிநிலையல்லாத பணியாட் குழுவின் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அலுவலர்கள், அபிவிருத்தி அலுவலர் சேவையின் அலுவலர்கள், தகவல் தொழிநுட்ப உதவி அலுவலர்கள், ஆவண உதவியாளர்கள், அலுவலக கனிட்ட ஊழியர்கள் மற்றும் சாரதிகள் ஆகியோரை உள்ளடங்கியது. அதற்கமைய 2018.03.31 ஆம் திகதிக்கு தேர்தல் ஆணைக்குழுவின் மொத்த பணியாட் குழுவினரின் உள்ளடக்கம் பின்வருமாறு.

| | எண்ணிக்கை |
|---|---|
| பதவிநிலை அலுவலர்கள்<br>(தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் அங்கத்தவர்கள் தவிர்ந்த ஏனைய பதவிநிலை அலுவலர்கள் உள்ளிட்ட) | 51 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 383 |
| அபிவிருத்தி அலுவலர் | 27 |
| தகவல் தொழிநுட்ப உதவியாளர் | 14 |
| ஆவண உதவியாளர் | 51 |
| வரவேற்பு அலுவலர் | 01 |
| அலுவலக கனிட்ட ஊழியர் | 175 |
| சாரதி | 46 |
| வாகன சுத்திகரிப்பாளர் | 01 |

தேர்தல் ஆணைக்குழுவின் மொத்தப் பணியாட் குழுவின், குறித்த காலப்பகுதியினுள் (2018.01.01 – 2018.03.31) மேற்கொள்ளப்பட்ட தாபன அலுவல்கள் பின்வருமாறு பொழிப்புப்படுத்தப்பட்டு காட்டப்பட்டுள்ளது.

அதற்கமைய தேர்தல் ஆணைக்குழுவின் பதவிநிலை அலுவலர்களின் பதவியுயர்வு, புதிய நியமனங்கள், இடமாற்றங்கள், விடுவிப்புக்கள் மற்றும் இளைப்பாறல்கள் பின்வருமாறு.

| | சேவை | எண்ணிக்கை |
|---|---|---|
| பதில் கடமைக்கு நியமனம் செய்தல் | இ.நி.சே. (I வகுப்பு) | 01 |
| | இ.நி.சே. (III வகுப்பு) | 01 |
| புதிய நியமனங்கள் | இ.த.தொ.தொ.சேவை | 01 |
| ஆணைக்குழுவினுள் இடமாற்றங்கள் | இ.நி.சே. (I வகுப்பு) | 01 |
| | இ.நி.சே. (III வகுப்பு) | 01 |
| விடுவிப்புச் செய்தல் | இ.நி.சே. (I வகுப்பு) | 01 |
| 2018.03.31 ஆம் திகதி இளைப்பாறல் | இ.நி.சே. (விஷேட வகுப்பு) | 01 |
| | அ.மு.உ.சே. (விஷேட வகுப்பு) | 01 |

தேர்தல் ஆணைக்குழுவின் பதவிநிலையல்லாத பணியாட் குழுவினரின் இடமாற்றங்கள், விடுவிப்புக்கள், இளைப்பாறல்கள், கேட்டுவிலகல், சேவையை விட்டுச் செல்லல் மற்றும் புதிய ஆட்சேர்ப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளவாறு மேற்கொள்ளப்பட்டது.

| | சேவை | எண்ணிக்கை |
|---|---|---|
| தேர்தல் ஆணைக்குழுவிற்கு இடமாற்றம் செய்தல் | அரச முகாமைத்துவ உதவியாளர் | 08 |

| | | |
|---|---|---|
| தேர்தல் ஆணைக்குழுவிலிருந்து விடுவிப்புச் செய்தல் - பதிலீட்டாளர் இன்றி | அரச முகாமைத்துவ உதவியாளர் | 01 |
| தேர்தல் ஆணைக்குழுவிலிருந்து விடுவிப்புச் செய்தல்- பதிலீட்டாளர் சகிதம் | அரச முகாமைத்துவ உதவியாளர் | 07 |
| 2018.03.31 ஆம் திகதிக்கு இளைப்பாறல் | அரச முகாமைத்துவ உதவியாளர் | 05 |
| | அலுவலக கனிட்ட ஊழியர் சேவை | 03 |
| அரச சேவையின் வேறு பதவிகளுக்காக விடுவிப்புச் செய்தல் | அலுவலக கனிட்ட ஊழியர் சேவை | 01 |
| கேட்டு விலகல் | அரச முகாமைத்துவ உதவியாளர் | 01 |
| மரணமடைதல் | அலுவலக கனிட்ட ஊழியர் சேவை | 01 |
| புதிய நியமனம்/ ஆட்சேர்ப்புச் செய்தல் | சாரதி சேவை | 05 |

## 06. தேசிய மற்றும் சர்வதேச பயிற்சிகள் மற்றும் உத்தியோகபூர்வ விஜயங்கள்

### தேசிய பயிற்சிகள்

- இக்காலப்பகுதியினுள் நிறுவன ரீதியான உள்நாட்டு பயிற்சிகளை வழங்குவதற்கான தேவைப்பாடொன்று ஏற்படாமைக்குக் காரணம் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் பணிகளில் பணியாட் குழுவினர் ஈடுபட்டிருந்தமையாகும்.

- தேசிய பயிற்சிகளாக இக்காலப்பகுதியினுள் தேர்தல் அலுவல்களுக்காக ஈடுபடுத்தப்படுகின்ற தெரிவத்தாட்சி அலுவலர்கள், உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள், சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள், வாக்கெண்ணல் அலுவலர்கள், கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் மற்றும் ஏனைய பணியாட் குழுவினருக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. தலைமை அலுவலகத்தினாலும் மற்றும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களினாலும் இந்த பயிற்சி அலுவல்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.

### சர்வதேச பயிற்சிகள்

தேர்தல் ஆணைக்குழுவினால் அதன் பதவிநிலை அலுவலர்களுக்கு மற்றும் இணைப்புச் செய்யப்பட்ட பணியாட் குழுவினருக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டு புலமைப் பரிசில்கள் மற்றும் பயிற்சிகள் தொடர்பான விபரம் பின்வருமாறு.

| காலம் | பங்குபற்றியவர்கள் | நாடு | நிகழ்ச்சித் திட்டம் |
|---|---|---|---|
| 2018.02.26 | திரு. ரி.ஏ.சீ. தலங்கம, பிரதித் தேர்தல்கள் ஆணையாளர்<br><br>திரு. டப்ளிவ்.ஏ.எல். விக்கிரமாராச்சி, | இந்தியா | Capacity Building for Voter Registration for Election Officials (BIMSTEC Member |

| | | | |
|---|---|---|---|
| தொடக்கம் 2018.03.03 வரை | உதவித் தேர்தல்கள் ஆணையாளர்<br><br>திரு. ஸ்ரீன் யாப்பா பொரலெஸ்ஸ, உதவித் தேர்தல்கள் ஆணையாளர்<br><br>திரு. பீ.எஸ். பத்திரண, உதவித் தேர்தல்கள் ஆணையாளர் | | Countries) |

**விசேட அலுவல்கள்**

- தேர்தல் ஆணைக்குழுவின் 2017 – 2020 வரையான நான்கு வருட மூலோபாயத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள் ஊடாக மாணவர் சமூகத்தை மற்றும் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களின் அலுவலர்களை அறிவுறுத்தும் செயலமர்வுகளை நடாத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் அது தொடர்பான முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.

- இலங்கை மக்களுக்கு சர்வசன வாக்குரிமைக் கிடைக்கப்பெற்ற 85 வருட பூர்த்தி விழா வைபவத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட கட்டுரை தொகுப்பு நூலை ஆங்கிலம்/ தமிழ் மொழிகளில் அச்சிடுவதற்குத் தேவையான அலுவல்களை மேற்கொள்ளல்.

- 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அமுலாக்கல் திட்டத்தை தயாரித்து நிதி அமைச்சிற்கு அனுப்பி வைத்த முதலாவது காலாண்டு முன்னேற்ற அறிக்கையை மீளாய்வு செய்தல்.

- தேர்தல் பணிகளுக்காக அரச சேவையின் அலுவலர்களின் தகவல்களை கணினியில் உட்சேர்த்தல் மற்றும் மாவட்டத் தேவைப்பாட்டின் அடிப்படையில் பதவிநிலை மற்றும் பதவிநிலையல்லாத அலுவலர்களை இணைப்புச் செய்தல் விஷேட ஒருங்கிணைப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வகுப்புக்களை நடாத்துதல்.

- தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட ஊடக வழிகாட்டு நெறிகளை பின்பற்றியொழுகுவதன் தேவைப்பாடு தொடர்பாக அரச மற்றும் தனியார் ஊடக நிறுவனங்களின் தலைவர்கள், நிரந்தர மற்றும் மாற்று முகவர்கள், முதன்மை இலத்திரனியல் ஊடக தலைவர்களை அறிவுறுத்தும் மூன்று ஊடக சந்திப்புக்கள், ஊடக வழிகாட்டு நெறிகளை செயல்வலுவாக்கம் செய்தல் தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பில் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பான ஊடக கலந்துரையாடல் மற்றும் 2018.02.10 ஆம் திகதிய உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் தொடர்பாக அறிவுறுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு என்பன நடாத்தப்பட்டன.

- ஏனைய மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள் உள்ளடங்கும் விதத்தில் கடந்த உள்ளூர் அதிகாரச சபைகள் தேர்தல்கள் தொடர்பான கற்றறிந்த பாடங்கள் மற்றும் பரிந்துரைகள் தொடர்பான கலந்துரையாடல்களை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**07. 2018.01.01 ஆம் திகதி தொடக்கம் 2018.03.31 ஆம் திகதி வரை தேர்தல் ஆணைக்குழுவினால் ஆற்றப்பட்ட நியதிச் சட்ட மற்றும் ஏனைய கடமைகள்**

**நியதிச் சட்ட கடமைகள்**

(i). அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பெயர்களை உள்ளடக்கிய வர்த்தமானி அறிவித்தல் 2050/17 ஆம் இலக்க 2018.01.20 ஆம் திகதி கொண்டதாக வெளியிடப்பட்டதோடு, உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் நடாத்தப்பட்டமை காரணமாக மற்றும் எல்பிட்டிய பிரதேச சபையின் தேர்தல் அலுவல்கள் நிறைவடையாமை காரணமாக அரசியல் கட்சிகளை அங்கீகரிப்பதற்கான விண்ணப்பங்கள் இதுவரை கோரப்படவில்லை.

**(ii) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் - 2018**

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் அலுவல்களை 2017 ஆம் ஆண்டினுள் நடாத்துவது தொடர்பில் தேவையான சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அதனோடு தொடர்புடைய தாபித்தல் வர்த்தமானி பத்திரத்தில் வெளியிடப்படாமை காரணமாக அது பிற்போடப்படும் போக்கொன்றை காணமுடிந்தது. இருப்பினும் இது தொடர்பாக மக்கள் அமைப்புக்கள் மற்றும் பொது மக்களிடையே அதிருப்தி மேலோங்கிக் காணப்பட்டதோடு, ஊடகங்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் இது தொடர்பில் விடயங்களை முன்வைத்து தேர்தலை நடாத்துவதற்கான அழுத்தங்களை மேற்கொண்டனர். இதற்கமைய அரசாங்கத்தால் உள்ளூர் அதிகார சபைகளை தாபித்தல் வர்த்தமானி 2017.04.07 ஆம் திகதி 2013/29 ஆம் இலக்கத்தின் கீழ் வெளியிடப்பட்டதோடு, அந்த வர்த்தமானி அறிவித்தல்கள் 2025/35 ஆம் இலக்க 2017.06.30 ஆம் திகதிய மற்றும் 2043/56 ஆம் இலக்க 2017.11.02 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் வெளியிடப்பட்டன அதற்கமைய வேட்புமனு அறிவித்தலை 2017.11.27 ஆம் திகதி தெரிவத்தாட்சி அலுவலர்களால் வெளியிடப்பட்டது. இது தொடர்பில் நீதிமன்றத்தில் விடயங்கள் முன்வைக்கப்பட்டிருந்தமையினால் அச்சமயம் பிரச்சினைகள் இல்லாத உள்ளூர் அதிகார சபைகளுக்காக வேட்புமனு அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன. அதற்கமைய வேட்புமனு கையேற்றல் 2017.12.11 ஆம் திகதி தொடக்கம் 2017.12.14 ஆம் திகதி வரை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. தேர்தலுடன் தொடர்புடையதாக மேற்கொள்ளப்பட வேண்டிய நியதிச் சட்ட அலுவல்கள் பின்வரும் தினங்களில் மேற்கொள்ளப்பட்டன.

**வேட்புமனு கட்டம் I**

| | | |
|---|---|---|
| வேட்புமனு அறிவித்தல் | - | 2017.11.27 |
| வேட்புமனுக்களை கையேற்றல் | - | 2017.12.11 - 14 |
| அஞ்சல் வாக்கு | - | 2017.11.27 – 2017.12.15 |
| அதிகாரமளிக்கப்பட்ட முகவர் நியமனம் | - | 2017.12.08 8.30 மணிக்கு முன்னர் |
| இளைஞர் வயது எல்லை | - | 1955.05.31 - 1982.12.14 |

**வேட்புமனு கட்டம் II**

| | | |
|---|---|---|
| வேட்புமனு அறிவித்தல் | - | 2017.12.04 |
| வேட்புமனுக்களை கையேற்றல் | - | 2017.12.18 – 2017.12.21 |
| அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைக் கையேற்றல் | - | 2017.12.01 – 2017.12.22 |
| அதிகாரமளிக்கப்பட்ட முகவர் நியமன காலப்பகுதி | - | 2017.12.15 8.30 மணிக்கு முன்னர் |

| | | |
|---|---|---|
| வாக்கெடுப்பு பற்றிய அறிவித்தல் | - | 2017.12.26 |
| வாக்கெடுப்புத் தினம் | - | 2018.02.10 (47 நாட்கள்) |

அதற்கமைய உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலோடு தொடர்புடையதாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் பினவருமாறு திகதி குறிக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| அஞ்சல் வாக்கு விநியோகம் தொடர்பான அறிவித்தல் | - | 2017.12.23 |
| அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தல் | - | 2018.01.10 |
| அஞ்சல் வாக்கு விநியோகம் | - | 2017.01.12 |
| அஞ்சல் வாக்கு அடையாளமிடல் | - | 2018.01.22/25/26 மற்றும் 2018.02.01/02 |
| உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை | - | 2018.02.14 ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு முன்னர் பகிர்ந்தளித்தல். |
| அஞ்சல் அலுவலகத்திற்கு கையளித்தல் | | 2018.01.18 (17 நாட்கள்) |
| விஷேட விநியோகம் | - | 2018.01.28 |
| பிரச்சார அலுவல்களிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டிய அமைதி காலப்பகுதி | - | 2018.02.07 ஆம் திகதி நள்ளிரவு தொடக்கம் 2018.02.10 ஆம் திகதி வாக்கெடுப்பு நிறைவடையும் வரை |
| வாக்கெடுப்பு | - | 2018.02.10 மு.ப 7.00 மணி தொடக்கம் பி.ப 4.00 மணி வரை |

முன்னர் காணப்பட்ட மையப்படுத்தப்பட்ட வாக்கெண்ணலுக்குப் பதிலாக வாக்கெண்ணல் ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையங்களில் அல்லது வட்டாரத்தின் அனைத்து வாக்கெடுப்பு நிலையங்களின் அனைத்து வாக்குப் பெட்டிகளும் ஒரு வாக்கெடுப்பு நிலையத்திற்கு எடுத்துவரப்பட்டு தனித்தனியாக வாக்கெண்ணப்பட்டன.

இரண்டு கட்டங்களிலும் பெயர் குறித்த நியமனங்கள் (அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள்) என்பவற்றால் கையளிக்கப்பட்டிருந்ததோடு, அந்த பெயர் குறித்த நியமனங்களில் சில ஒழுங்கு விதிகளுக்கு ஒத்திசையாமை காரணமாக நிராகரிக்கப்பட்டன. அது தொடர்பாக மற்றும் வேட்பாளர்களின் பெயர்கள் நிராகரிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் தொடர்பாக பாதிப்புக்குட்பட்ட தரப்பினர் 54 நீதிமன்ற நடவடிக்கைகளையெடுத்திருந்ததோடு, எல்பிட்டிய பிரதேச சபைக்குரிய மனு தவிர்ந்த ஏனைய 53 மனுக்களும் வாக்கெடுப்பு தினத்திற்கு முன்னர் கௌரவ நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டன.

இதற்கமைய 2018.02.10 ஆம் திகதி உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் தீவு முழுவதிலும் 340 உள்ளூர் அதிகார சபைகளுக்காக (எல்பிட்டி பிரதேச சபை தவிர) நடாத்தப்பட்டன. எல்பிட்டி பிரதேச சபைத் தேர்தல் நீதிமன்ற நடவடிக்கைகள் காரணமாக நடாத்த முடியவில்லை. வாக்கெடுப்பு அமைதியாகவும் மற்றும் விஷேட அச்சுறுத்தல்களின்றியும்

இடம்பெற்றன. உரிய விதத்தில் ஒவ்வொரு மாவட்டம் மற்றும் உள்ளூர் அதிகார சபைகளின் தெரிவத்தாட்சி அலுவலர்களால் வாக்கெண்ணப்பட்ட பின்னர் முடிவுகள் வெளியிடப்பட்டன. தேசிய மட்டத்தில் முடிவுகளை வெளியிடுவதில் சில தாமதங்கள் ஏற்பட்டதோடு, அதற்குக் காரணம் வாக்கெடுப்பு நிலையங்கள் மட்டத்தில் முடிவுகள் கணினியில் பதியும் போது முகங்கொடுக்க நேரிட்ட தொழிநுட்ப கோளாறுகளினாலாகும். இருந்த போதிலும் ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது மாற்றமான தேர்தல் முறையொன்றின் கீழ் முழுத் தீவும் உள்ளடங்கும் விதத்தில் அனைத்து படிவங்கள் மற்றும் வாக்குச் சீட்டுக்கள் என்பவற்றை உள்ளூர் அதிகார சபை அடிப்படையில் தனித்தனியாகத் தயாரித்து நடாத்தப்பட்ட இத்தேர்தல் புதியதோர் அனுபவமாக அமைந்தது. அதேபோன்று தேர்தல் ஆணைக்குழு தாபிக்கப்பட்ட பின்னர் நடாத்தப்பட்ட முதலாவது தேர்தலும் இத்தேர்தலேயாகும். அதேபோன்று காணப்பட்ட அனைத்து தடைகளையும் வெற்றிக் கொண்டு நீதியான மற்றும் அமைதியான தேர்தலொன்றை குறுகிய காலமொன்றினுள் நடாத்த முடிந்தமை தேர்தல் ஆணைக்குழு பெற்றுக் கொண்ட ஒரு வெற்றியாக கருத முடியும்.

இத்தேர்தல் நிறைவடைந்த பின்னர் தேர்தல் ஆணைக்குழுவினால் கீழே காட்டப்பட்டுள்ள அரச வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன.

| வர்த்தமானி இலக்கம் மற்றும் திகதி | | விபரம் |
|---|---|---|
| 2059/83 (2018.02.24) | - | ஒவ்வொரு உள்ளூர் அதிகார சபைக்குமுரிய அதிகமாக காணப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை உள்ளடக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல். |
| 2060/22 (2018.02.28) | - | ஒவ்வொரு வட்டாரத்திற்குமுரிய முடிவுகள் தேர்தல் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் மற்றும் உள்ளூர் அதிகார சபைகள் நிறுவனங்களிலும் மற்றும் கிராம அலுவலர் அலுவலகங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவித்தல். |
| 2060/23 (2018.02.28) | - | ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபைக்குமுரியதாக அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்குரித்துடைய உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் காட்டுகின்ற தெரிவத்தாட்சி அலுவலர்களின் வெளிப்படுத்துகை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள் உள்ளூர் அதிகார சபை நிறுவனங்கள் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதாக அறிவித்தல். |
| 2061/42 (2018.03.09) | - | தெரிவு செய்யப்பட்ட மற்றும் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்ட உறுப்பினர்களை பகிரங்கப்படுத்தல். (கண்டி மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள்) |
| 2062/15 (2018.03.13) | - | தெரிவு செய்யப்பட்ட மற்றும் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்ட உறுப்பினர்களை பகிரங்கப்படுத்தல். (கண்டி மாவட்டம்) |

2062/51 (2018.03.17) - நகராதிபதி, பிரதி நகராதிபதி, தவிசாளர், துணை தவிசாளர் நியமனம் செய்தல் (15 உள்ளூர் அதிகார சபைகளுக்குரியது)

2063/01 (2018.03.19) - தெரிந்தெடுத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பெயர்களை பகிரங்கப்படுத்தல் (ஸ்ரீ லங்கா பொ.பெ உறுப்பினர்கள் மாநகர சபைக்குரியதாக)

2063/41 (2018.03.22) - நகராதிபதி, பிரதி நகராதிபதி, தவிசாளர், துணை தவிசாளர் நியமனம் செய்தல் (93 உள்ளூர் அதிகார சபைகளுக்குரியது)

2066/05 (2018.03.26) - நகராதிபதி, பிரதி நகராதிபதி, தவிசாளர், துணை தவிசாளர் நியமனம் செய்தல் (51 உள்ளூர் அதிகார சபைகளுக்குரியது)

2064/42 (2018.03.29) - பூஜாப்பிட்டிய பிரதேச சபை உறுப்பினர்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் திகதியை திருத்தம் செய்தல்.

2064/43 (2018.03.29) - கெக்கிராவ பிரதேச சபை உறுப்பினர்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் திகதியை திருத்தம் செய்தல்.

2064/44 (2018.03.29) - நகராதிபதி, பிரதி நகராதிபதி, தவிசாளர், துணை தவிசாளர் நியமனம் செய்தல் (07 உள்ளூர் அதிகார சபைகளுக்குரியது)

2065/12 (2018.04.03) - கங்கஇஹலகோரளை மற்றும் ஹப்புத்தளை பிரதேச சபைக்களுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினால் தெரிந்தெடுத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பெயர்களைப் பகிரங்கப்படுத்தல்.

2066/12 (2018.04.10) - பெந்தர, பலப்பிட்டிய மற்றும் ஆனமடுவ ஆகிய பிரதேச சபைகளின் தவிசாளர், துணை தவிசாளர்களை நியமனம் செய்தல்.

2067/26 (2018.04.19) - பேருவளை பிரதேச சபைக்குரிய மக்கள் விடுதலை முன்னணியின் தெரிந்தெடுத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பெயர்களைப் பகிரங்கப்படுத்தல்.

கங்கஇஹல கோரளை, ஹப்புத்தளை மற்றும் பேருவளை பிரதேச சபைகளில் பெண்கள் அதிகமான நகர சபைகள் மற்றும் கொழும்பு மாநகர சபையின் தெரிந்தெடுத்து அனுப்ப வேண்டிய உறுப்பினர்கள் ஒருவர் வீதம் அல்லது இருவர் வீதம் குறித்த அரசியல் கட்சிகளால் மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை அனுப்பவில்லையென்பதால், அந்த பெயர்கள் ஏப்ரல் மாதம் முதல் வாரத்தினுள் அனுப்பப்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேபோன்று உறுப்பினர்களில் 50% அல்லது அதைவிட அதிகமாக ஒரு கட்சிக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பெந்தர, பலப்பிட்டிய மற்றும் ஆனமடுவ ஆகிய பிரதேச சபைகளின் தவிசாளர், துணை தவிசாளர் ஆகியோரை பெயர்குறித்தல் குறித்த கட்சி மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை நடவடிக்கையெடுக்கவில்லை என்பதால் அந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுதல் தாமதமடைந்துள்ளது.

2018.02.10 ஆம் திகதி நடாத்தப்பட்ட தேர்தலோடு தொடர்புடைய விரிவான அறிக்கையொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்படுவதோடு, அதற்கு முன்னர் இடைக்கால அறிக்கையொன்றை 2018 ஏப்ரல் மாதத்தினுள் வெளியிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

**(iii) 2018 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வு**

❖ தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கமைய 2018.02.10 ஆம் திகதி நடாத்தப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலுக்காக பயன்படுத்தப்பட்ட 2017 ஆம் தேருநர் இடாப்பில் ஒரே தேசிய அடையாள அட்டை இலக்கத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள பன்மைப் பதிவு தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கமைய ஒரே தேசிய அடையாள அட்டை இலக்கத்தின் கீழ் சமமான பெயர்களைக் கொண்ட 6092 நபர்கள் ஆவணங்களின் பரிசீலனைக்கு (Elections கணினி நிகழ்ச்சித் திட்டம்) அமைய இனங்காணப்பட்டதோடு, அந்த நபர்களுக்கு தாம் வாக்களிக்க விருப்பமான ஓர் இடத்தை அறிவிக்குமாறு வாக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள இடங்கள் (மாவட்டங்கள்) இரண்டிற்கும் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டது. அதேபோன்று ஒரே தேசிய அடையாள அட்டை இலக்கமொன்றின் கீழ் சமமற்ற பெயர்களைக் கொண்ட 75530 நபர்கள் ஆவணங்களின் பரிசீலனைக்கமைய (Elections கணினி நிகழ்ச்சித் திட்டம்) இனங்காணப்பட்டதோடு, அந்த நபர்களுக்கும் இரண்டு இடங்களுக்கும் (மாவட்டங்களுக்கும்) கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. அதற்கமைய அந்த நபர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற எழுத்து பதில்களின் அடிப்படையில் ஓர் இடத்தில் மாத்திரம் வாக்களிக்கக்கூடிய விதத்தில் வாக்கெடுப்பு நிலையங்களுக்கு வாக்கெடுப்பு அலுவல்களுக்காக பயன்படுத்தப்பட்ட தேருநர் இடாப்பில் ஓர் இடத்தில் (MR என குறித்து) மாத்திரம் வாக்களிக்க இடமளிக்கப்பட்டது. வாக்கெடுப்பு நிலையங்களுக்கு வழங்கப்பட்ட தேருநர் இடாப்புக்களிலும் MR என குறித்து வழங்கப்பட்டது.

❖ அதேபோன்று இவ்வாறு ஒரே தேசிய அடையாள அட்டை இலக்கத்தின் கீழ் பன்மை பதிவு தொடர்பான கடிதங்களை குறித்த நபர்களுக்கு அனுப்பியதன் காரணத்தால் குறித்த நபர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கமைய ஒரே இலக்கங்களைக் கொண்ட தேசிய அடையாள அட்டைகள் இரண்டு நபர்களுக்கு ஆட்பதிவு ஆணையாளர் நாயகத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதோடு, சில நபர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கம் Elections கணினி நிகழ்ச்சித் திட்டத்தில் பிழையாக உட்சேர்க்கப்பட்டமை காரணமாக பன்மைப் பதிவாக காட்டியுள்ளமையினால் இக்குறைபாடு அந்தந்த மாவட்ட அலுவலகங்கள் மூலம் “பிசீ” படிவங்களோடு பரீட்சித்துப் பார்த்து Elections கணினி நிகழ்ச்சித் திட்டத்தில் பிழைத் திருத்தம் செய்வதற்கும் 2018 மீளாய்வுக்காகக விநியோகிக்கப்படவுள்ள “பிசீ” பற்றுச் சீட்டிலும் இக்குறைபாட்டை சரி செய்து அச்சிடுவதற்கும் ஏற்கனவே நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

❖ மேலும் இந்த பன்மைப் பதிவு தொடர்பான தகவல்கள் இறுவட்டு மூலம் ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ளதெனவும், அதற்கமைய ஏற்கனவே பெரும்பாலான நபர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கங்களை பிழைத் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதோடு, அந்த நபர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கங்களையும் 2018 தேருநர் இடாப்பு மீளாய்வு மேற்கொள்கின்ற சந்தர்ப்பத்தில் நிகழ்நிலைப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

❖ 2018 தேருநர் இடாப்பு மீளாய்வுக்குரிய பூர்வாங்க அலுவல்கள் அதாவது, 2018 ஆம் ஆண்டுக்குரிய “பிசீ” படிவங்கள் மற்றும் ஏனைய படிவங்கள் அச்சிடப்பட்டு அனைத்து மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்கும் ஏற்கனவே விநியோகிக்கப்பட்டுள்ளதோடு, வாக்காளர் கணக்கெடுப்பு அலுவல்கள் தொடர்பான பொதுவான அறிவுறுத்தல் கடிதமொன்று தீவின் அனைத்து பதிவு/ உதவிப் பதிவு அலுவலர்களுக்கும் அரசியல் கட்சி முகவர்களை நியமனம் செய்தலோடு தொடர்புடைய பொது அறிவுறுத்தல் கடிதமொன்று அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

❖ 2018 இல் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் சந்தர்ப்பத்தின் போது வாக்கெடுப்பு நிலையம், வாக்கெடுப்பு மாவட்டம் என்பவற்றின் உள்ளடக்கம் மாறுப்பட்டமை தொடர்பான

முன்மொழிவுகள் பல்வேறு அரசியல் கட்சிகள்/ சிவில் அமைப்புக்கள்/ சமயத் தலைவர்கள் ஆகியோரிடமிருந்து கிடைக்கப்பெற்றமை காரணமாக 2018 தேருநர் இடாப்பு மீளாய்வு மேற்கொள்கின்ற சந்தர்ப்பத்தின் போது இது தொடர்பான விடயங்களை ஆராய்ந்து பார்த்து தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 9(3) ஆம் பிரிவின் கீழ் ஏதேனும் திருத்தமொன்றை மேற்கொள்வது அவசியமெனில், அது தொடர்பான தகவல்களை தலைமை அலுவலகத்திற்கு வழங்குமாறு அனைத்து மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

- 2018 தேருநர் இடாப்பு மீளாய்வுக்குரிய களக் கணக்கெடுப்பு காலப்பகுதியினுள் குறித்த கிராம அலுவலர்களின் இடமாற்றங்களை இடைநிறுத்துதல் மற்றும் அக்காலப்பகுதியினுள் கிராம அலுவலர் அலுவலக நாட்களை மட்டுப்படுத்தல் தொடர்பாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதோடு, அக்கடிதத்தின் ஒரு பிரதி தீவின் அனைத்து பதிவு மற்றும் உதவிப் பதிவு அலுவலர்கள்/ அனைத்து பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம அலுவலர் தொழிற்சங்க முகவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**iii. மாகாண சபை உறுப்பினர் பதவி வெற்றிடங்களை நிரப்புதல்.**

2018 மார்ச் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த முதலாம் காலாண்டுக்குரிய பின்வரும் மாகாண சபை உறுப்பினர் பதவி வெற்றிடம் தேர்தல் ஆணைக்குழுவினால் நிரப்பப்பட்டது.

| மாகாண சபை | நிருவாக மாவட்டம் | வெற்றிடமான மாகாண சபை உறுப்பினர் பதவியை வகித்த உறுப்பினரின் பெயர் | அரசியல் கட்சி/ சுயேச்சைக் குழு | மாகாண சபை செயலாளரினால் அறிவிக்கப்பட்ட திகதி | வெற்றிடம் ஏற்பட்டமைக்கான காரணம் | தெரிவு செய்யப்பட்ட உறுப்பினரின் பெயர்/ எடுக்கப்பட்ட நடவடிக்கை | உரிய வர்த்தமானி பத்திரத்தின் இலக்கம் | உரிய வர்த்தமானி பத்திரத்தின் திகதி |
|---|---|---|---|---|---|---|---|---|
| மேல் | கொழும்பு | எஸ். குகவரதன் | ஒருமித்த முற்போக்கு கூட்டணி | 2017.12.21 | கேட்டு விலகல் | ஸ்டேன்லி அன்டனி சண்முகம் | 2055/33 | 2018.01.24 |
| | கொழும்பு | உஸ்வத்த லியனகே சேனக தமயந்த த சில்வா | ஐக்கிய தேசியக் கட்சி | 2017.12.19 | கேட்டு விலகல் | கிருஷாந்த யோகதாஸ் பஞ்சரத்னம் ராம் | 2052/27 | 2018.01.05 |
| | கம்பஹா | ஜயவீர ஆரச்சிகே ரொயிஸ் விஜித பிரனாந்து | ஐக்கிய தேசியக் கட்சி | 2017.12.18 | கேட்டு விலகல் | சுதசிங் மஞ்சநாயக்க அப்புஹாமிலாகே கித்சிறி மஞ்சநாயக்க | 2058/27 | 2018.02.14 |
| | கம்பஹா | மாதம்பே அப்புஹாமிலாகே மஞ்ஜுல பிரசன்ன சம்பத் | ஐக்கிய தேசியக் கட்சி | 2017.12.12 | கேட்டு விலகல் | உதுவன் பத்திரென்னெலாகே சந்திரசோம சரணலால் | 2055/33 | 2018.01.24 |
| வடக்கு | மன்னார் | ஹபிபூ மொஹமது ரயீஸ் | ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 2017.12.05 | கேட்டு விலகல் | அப்துல் நியாஸ் சீனி மொஹமட் | 2055/34 | 2018.01.24 |
| | யாழ்ப்பாணம் | இம்மானுவல் ஆனல்ட் | இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 2017.12.14 | கேட்டு விலகல் | சபாரத்னம் குகதாஸ் | 2055/34 | 2018.01.24 |

## 08. நிதி ஒதுக்கீடுகள்

தேர்தல் ஆணைக்குழுவின் 2018 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டின் செலவுப் பொழிப்பு பின்வருமாறு

| விபரம் | ஒதுக்கீடு | மாற்றல் /வெட்டிவிடப்பட்ட ஒதுக்கீடுகள் | | | தேறிய ஒதுக்கீடு | முதலாம் காலாண்டின் செலவு | வைப்புக்கள்/ சொத்துக்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | மேலதிக ஒதுக்கீகள் | ஒன்று சேர்த்தல் | குறைத்தல் | | | |
| சம்பளம் மற்றும் வேதனம் | 230,000,000 | | | | 230,000,000 | 55,589,784 | 174,410,216 |
| சம்பளம் மற்றும் வேதனம் (21) | 3,000,000 | | | | 3,000,000 | 750,000 | 2,250,000 |
| மேலதிக வேலை நேரம் மற்றும் விடுமுறை தினச் சம்பளம் | 10,000,000 | | | | 10,000,000 | 7,639 | 9,992,361 |
| வேறு படிகள் | 170,000,000 | | | | 170,000,000 | 31,308,797 | 138,691,203 |
| பிரயாணச் செலவு – உள்நாடு | 5,000,000 | | | | 5,000,000 | 9,524 | 4,990,476 |
| பிரயாணச் செலவு - வெளிநாடு | 2,000,000 | | | | 2,000,000 | | 2,000,000 |
| எழுது பொருட்கள் மற்றும் அலுவலக தேவைப்பாடுகள் | 4,750,000 | | | | 4,750,000 | 155,760 | 4,594,240 |
| எரிபொருள் (வெட்டிவிடல் 15%) | 12,000,000 | | | | 12,000,000 | 1,110,609 | 10,889,391 |
| உணவு மற்றும் சீருடை | 500,000 | | | | 500,000 | 144,000 | 356,000 |
| வாகனங்கள் | 12,000,000 | | | | 12,000,000 | 348,770 | 11,651,230 |
| இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 8,000,000 | | | | 8,000,000 | 1,002,983 | 6,997,017 |
| கட்டிடம் மற்றும் நிருமாணம் | 300,000 | | | | 300,000 | | 300,000 |
| போக்குவரத்து (வெட்டிவிடல் 10%) | 7,000,000 | | | | 7,000,000 | 1,629,194 | 5,370,806 |
| அஞ்சல் மற்றும் தொடர்பாடல் | 15,500,000 | | | | 15,500,000 | 2,804,227 | 12,695,773 |
| மின்சாரம் மற்றும் நீர் | 14,000,000 | | | | 14,000,000 | 3,029,561 | 10,970,439 |
| வாடகை மற்றும் குத்தகை கட்டணம் | 7,000,000 | | | | 7,000,000 | 1,685,535 | 5,314,465 |
| லீசிங் முறையின் கீழ்ஒதுக்கீடு | 5,900,000 | | | | 5,900,000 | | 5,900,000 |
| வேறு | 4,021,646,000 | | | | 4,021,646,000 | 1,276,440,229 | 4,418,559,771 |
| ஆதனக்கடன் வட்டி | 4,500,000 | | | | 4,500,000 | 1,020,040 | 3,479,960 |
| கட்டிடம் மற்றும் நிருமாணம் | 30,000,000 | | | | 30,000,000 | 94,634 | 29,905,366 |
| தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 3,000,000 | | | | 3,000,000 | 15,193 | 2,984,807 |
| இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 26,250,000 | | | | 26,250,000 | 610,669 | 25,639,331 |
| கட்டிடம் மற்றும் நிருமாணம் | 50,000,000 | | | | 50,000,000 | - | 50,000,000 |
| காணி மற்றும் காணி விருத்தி | 1,000,000 | | | | 1,000,000 | | 1,000,000 |
| பயிற்சி, திறன் விருத்தி | 4,000,000 | | | | 4,000,000 | 528,864 | 3,471,136 |
| | **4,532,946,000** | **-** | **-** | **-** | **4,537,746,000** | **126,972,790** | **4,942,413,988** |

09. **2018 ஆம் ஆண்டுக்குரிய எதிர்கால அலுவல்கள்**

i. நான்கு வருட மூலோபாயத் திட்டத்திற்கமைய தயாரிக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டின் அமுலாக்கல் திட்டத்திற்கமைவாகச் செயற்படல்.

ii. விஷேட கருத்திட்டங்களில் 2018 ஆம் ஆண்டுக்காக திட்டமிடப்பட்ட அலுவல்களை நடைமுறைப்படுத்தல்.

iii. 2018 யூன் மாதம் 01 ஆம் திகதி வாக்காளர் தினத்தைக் கொண்டாடுதல்.

iv. 2018 ஆம் ஆண்டின் தேருநர் பதிவோடு தொடர்புடைய அலுவல்கள் மற்றும் அது தொடர்பாக அறிவுறுத்துதல்.

v. தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம், பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம் உள்ளிட்ட தேர்தல்கள் சட்டத் திருத்தங்களுக்குத் தேவையான அலுவல்களை மேற்கொள்ளல்.

vi. 2018 ஆம் ஆண்டில் நடாத்தப்படவுள்ள தேர்தல்களை நடாத்துவதற்காக பூர்வாங்க அலுவல்கள் பூர்த்தியடைந்ததன் பின்னர், தேர்தல்களை நடாத்துவதற்கு நடவடிக்கையெடுத்தல்.

vii. அரசியல் கட்சிகளைப் புதிதாகப் பதிவு செய்தலுடன் தொடர்புடைய அலுவல்களை நிறைவு செய்தல்.

viii. 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆம் திகதியின் பின்னர் 18 வயது பூர்த்தியடையும் இளைஞர் யுவதிகளின் பெயர்களை தேருநர் இடாப்பில் உட்சேர்ப்பதற்குத் தேவையான சட்டங்களை வகுப்பதற்கு நடவடிக்கையெடுத்தல்.

ix. மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத் திருத்தத்திற்குத் தேவையான தகவல்களை வழங்குதல்.

x. தேர்தல் ஆணைக்குழுவிற்குக் கையளிக்கப்படுகின்ற ஏனைய கடமைகளை ஆற்றுதல்.

2018.01.01 ஆம் திகதி தொடக்கம் 2018.03.31 ஆம் திகதி வரையான 2018 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுக்குரிய காலப்பகுதியினுள் தேர்தல் ஆணைக்குழுவின் நியதிச் சட்ட அலுவல்கள் மற்றும் ஏனைய நிருவாக முகாமைத்துவ அலுவல்கள் தொடர்பான செயலாற்றுகை விபரம் மேலே குறிப்பிடப்பட்டுள்ளது.

**தேர்தல் ஆணைக்குழுவின் கட்டளைக்கமைய,**

**ஹே.மு.தி.தி. ஹேரத்,** **2018.04.15**

செயலாளர்,
தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை, இராஜகிரிய.